**செ.வெ.எண்-29** **நாள்-17.03.2018**

# அரியலூர் மாவட்டத்தில் மக்கள் தொடர்பு முகாம்

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், மணப்பத்தூர் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஆர்.டி.இராமச்சந்திரன்** அவர்கள் முன்னிலையில் இன்று (17.03.2018) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், சமூக பாதுகாப்புத்திட்டத்தின்கீழ் 5 பயனாளிகளுக்கு ரூ.70 ஆயிரத்து 500 மதிப்பில் உதவித்தொகையும், வருவாய்துறையின் சார்பில் 87 பயனாளிகளுக்கு ரூ.8 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பில் நத்தம் மற்றும் வீட்டுமனைப்பட்டாக்களையும், 4 பயனாளிகளுக்கு வாரிசு சான்றுகளையும், 43 பனாளிகளுக்கு பட்டமாற்றத்திற்னான ஆணைகளையும், வேளாண்மைத்துறையின் சார்பில் 11 பயனாளிகளுக்கு ரூ.1 இலட்சத்து 6 ஆயிரத்து 190 மதிப்பில் வேளாண் இடுப்பொருட்களையும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 3 நபர்களுக்கு ரூ.20 ஆயிரத்து 820 மதிப்பில் மூன்று சக்கர வண்டிகளையும், கூட்டுறவுத்துறையின் சார்பில் 12 பயனாளிகளுக்கு ரூ.10 இலட்சத்து 58 ஆயிரத்து 925 மதிப்பில் விவசாய கடன் மற்றும் மாற்றுத்திறனாளி கடனுதவிகளையும் என ஆகமொத்தம் **165 பயனாளிகளுக்கு ரூ.21 இலட்சத்து 26 ஆயிரத்து 435** மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் மற்றும் குன்னம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஆர்.டி.இராமச்சந்திரன்** அவர்கள் ஆகியோர் வழங்கினார்கள்.

**இம்முகாமில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது :-**

மணப்பத்தூர் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாமிற்கு முன்னதாக பொதுமக்களிடமிருந்து **90** கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, இதில் **76** கோரிக்கை மனுக்கள் ஏற்கப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த முகாமில், வேளாண்மைத்துறை, கால்நடைப்பராமரிப்புத்துறை, செய்தித்துறை, தோட்டக்கலைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகிய துறைகளின் சார்பாக பொதுமக்களுக்கு திட்ட விளக்கி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது.

இம்மக்கள் தொடர்பு முகாம் 15 நாட்களுக்கு முன்னரே இப்பகுதி மக்களின் கோரிக்கை மனுக்கள் பெற்று, அம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, இன்று (17.03.2018) **165 பயனாளிகளுக்கு ரூ.21 இலட்சத்து 26 ஆயிரத்து 435** நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, இதுபோன்று மக்கள் தொடர்பு முகாம்களில் பொதுமக்கள் திரளாக அரசின் நலத்திட்ட உதவிகளை கிராமப்புற மக்கள் பயன்படுத்தி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் பேசினார்கள்.

இம்முகாமில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) ஜி.கே.லோகேஷ்வரி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.வீ.சி.ஹேமசந்த்காந்தி, மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் ஜெயராணி, மாவட்ட துணைப்பதிவாளர் (பொதுவிநியோகத்திட்டம்) கே.கே.செல்வராஜ், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஆர்.பாலாஜி, குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் செல்வராஜ் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டார்கள்.

செந்துறை துணை வட்டாட்சியர் அனைவரையும் வரவேற்றர். முடிவில், ஆர்.எஸ் மாத்தூர் வருவாய் ஆய்வாளர் நன்றி கூறினார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**